# முயன்றால் முடியும்!

நம் எல்லோருக்குமே நன்றாக இருக்க வேண்டும்; வசதியாக வாழ வேண்டும்; வாழ்வில் உயர வேண்டும்; இன்னும் சொல்லப்போனால் மற்றவர்கள் வியக்கும்படியான மேன்மைகளை அடைய வேண்டும் என்றெல்லாம் ஆசைகள் இருக்கின்றன. ஆனால், எல்லோருமா இப்படி உயர்ந்து விடுகிறார்கள்?

இல்லை !

பிறகு ஏன் வெவ்வேறு நிலைகளில் வாழ் கிறார்கள்? இந்தக் கேள்விக்கான விடை மிக எளிது.

முயற்சி உடையவர்கள் உயர்கிறார்கள்.

முயற்சி இல்லாதவர்கள் தேங்கிப்போய் பாசி பிடித்த குளம்போல் ஆகிவிடுகிறார்கள். அப்படி யானால், இந்த உலகில் வளர்ச்சிக்கு முயற்சியைத் தவிர வேறு காரணங்களே இல்லையா?

என்பதற்காக நீங்கள் கிடைத்த வேலையை யெல்லாம் விட்டுவிட்டீர்கள். நீங்கள் கிடைத்த வேலையில் சேர்ந்துகொண்டு அதில் இருந்தபடியே உங்கள் மனதிற்குப் பிடித்த மாதிரியான நல்லதொரு வேலைக்கு முயன்றிருக்கலாமே! அந்தச் சாதாரண வேலையைக் கூட ஓர் ஏணியைப் போல், நீங்கள் ஏற விரும்பிய உயரத்துக்குப் பயன்படுத்தி யிருக்கலாமே."! என்றேன்.

அதற்குமேல் அவருக்கு ஆலோசனை கூறினால் அவர் எரிச்சல்படுவார் என்பது எனக்குத் தெரியும். முயற்சிகளுக்கு வெற்றி உண்டு.

அதற்காக ஒரேயடியாகப் பத்தாவது படிக் கட்டுக்குத் தாவ நினைப்பவர்கள் தங்கள் முயற்சி யில் தோல்வியுற்றுவிட்டதாக வெளியில் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். இதைவிட வேடிக்கை என்னவென்றால் இனிமேல் நாம் முயற்சி செய்வதே வீண் என்கிற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள்.

எவ்வளவு தவறான இடம் இது !

பெரும்பாலான வெற்றியின் இலக்குகள் பல டங்களைக் கொண்டவை. ஒவ்வொன்றாகத்

"ஏழு வருடங்களாக முயற்சி செய்து வருகிறீர்கள்"? என்று கேட்டேன்.

"ஆமாம்" என்றார்.

"ஒரு வேலை கூடவா கிடைக்கவில்லை?"

"இல்லை" என்றார்.

"நன்றாக நினைவுபடுத்திச் சொல்லுங்கள். நீங்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏழு வருடங்களாக முயற்சி செய்து ஒரு வேலை கூட கிடைக்கவில்லை என்று சொன்னால் அதை யாருமே நம்ப மாட்டார்கள்" என்றேன்.

என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு இப்படிச் சொன்னார்:

"ஒருசில வேலைகள் கிடைத்தன. ஆனால் எனக்கு அவை பிடிக்கவில்லை. விட்டுவிட்டேன்" என்றார்.

"அதுதானே பார்த்தேன். முயற்சிகளுக்கு நிச்சயம் பலன் உண்டு. ஆனால், உங்களுக்குப் பிடித்த மாதிரி வேலை அமையவில்லை

இறையருள், அதிர்ஷ்டம், நேரம் என்பவை யெல்லாம் காரணங்களாக ஆக முடியாதா என்று நீங்கள் கேட்கலாம்.

இது ஒரு நியாயமான கேள்வி.

இறையருள் என்பதும், அதிர்ஷ்டம் என்பதும், நேரம் என்பதும் நமக்கு அப்பாற்பட்ட சக்திகள் தாம்: மறுக்கவில்லை.

ஆனால் இந்த மூன்றுமேகூட மனித முயற்சி இல்லாமல் கைகூடுவது இல்லை.

என்னைப் பார்க்க ஓர் இளைஞர் வந்தார்; எம்.ஏ. படித்தவர். வேலை கேட்டு என்னை அணுகினார். அவரைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்வதற்காக அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். அவரது வயது 29. அவர் படிப்பை முடித்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டன.

"ஏழு வருடங்களாக என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன். "வேலை எதுவும் கிடைக்கவில்லை. முயற்சி செய்து கொண்டிருந்தேன்" என்றார்.

தொட்டு, உயர்ந்து, படிப்படியாகத்தான் இலக்கை அடைய முடியும்.

இந்த உண்மை தெரியாததனால்தான் அந்த இளைஞர் ஏழு வருடங்களாக வேலையில்லாமல் இருந்தார் என்பது மிகத் தெளிவான விஷயம்.

29 வயது ஆகியும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்காமல் "எல்லாத்துக்கும் நேரம் வரணும் தம்பி" என்று தத்துவம் பேசிக் கொண்டிருந்த ஓர் அப்பாக்காரரை நான் சந்திக்க நேர்ந்தது.

"நம்ம கையில் என்ன இருக்குத் தம்பி!" என்று என்னிடமும் சொன்னார்.

"உங்கள் கையில் நிறைய இருக்கிறது. உங்கள் சமூகத்தில் உள்ள பெரியவர்களைப் போய்ப் பாருங்கள். உங்கள் வட்டத்தில் உங்களுக்குத் தெரிந்த பையன் யாராவது இருக்கிறானா என்று யோசித்துப் பாருங்கள். நன்கு தெரிந்த பத்து வீடுகளில் ஏறி இறங்கி "நல்ல மாப்பிள்ளை இருந்தால் சொல்லுங்கள்" என்று சொல்லி வையுங்கள். உங்கள் சமூகத்தில் திருமணங்களைப் பேசி முடிக்கும் நிறுவனங்களில் உங்கள் மகளைப்

'அப்படி வாங்க வழிக்கு!' என்று நினைத்துக் கொண்டேன். மாப்பிள்ளை கூடக் கூரையை பிய்த்துக் கொண்டு குதிப்பார் என்று எதிர்பார்த்தால் அத்தகையவர்களை நினைத்துச் சிரிப்பதா அழுவதா?

எல்லாச் செயல்களுக்கும், மனித முயற்சிகள் தேவை. இது மற்றவர்கள் நம்பும் அதிர்ஷ்டத் தையும் நல்ல நேரத்தையும் நெருங்க வைத்துச் சேர்க்கும் முயற்சியாகும்.

சூழ்நிலைகள் கட்டாயப்படுத்தினால்தான் நான் முயற்சி மேற்கொள்வேன். அதுவரை நான் தூங்கிக் கொண்டே இருப்பேன் என்று சொல்லாமல், சொல்லுகிறவர்களும் உண்டு.

இது தொடர்பாக ஒரு செய்தி.

அமெரிக்காவில் நடந்த ஓர் உண்மைச் சம்பவம் இது.

ஒரு சிறிய காரின் கீழே நுழைந்து அதை ரிப்பேர் செய்து கொண்டிருந்தான் ஓர் இளைஞன். திடீரென அந்தக் காரைத் தூக்கி நிறுத்தியிருந்த

பற்றிய செய்திகளைப் பதிந்து வையுங்கள். பத்திரிகைகளில் விளம்பரம் கொடுங்கள். இவையெல்லாம் நம் கையில்தானே இருக்கின்றன!'' என்றேன்.

கொஞ்சம் யோசித்துவிட்டு, சரி என்கிற மாதிரிச் சிரித்தார்.

''இவற்றையெல்லாம் செய்தால் நீங்கள் சொல்லும் நேரமும், காலமும் தாமாகக் கைகூடி வரும்'' என்றேன்.

கொஞ்சநாள் கழித்து அவர், தொலைபேசியில் என்னுடன் பேசினார். ''நல்ல இடம் வந்தது தம்பி! முடித்துக்கொண்டேன்'' என்று வெறுமனே சொன்னார்.

''தகவல் அதுவாகவா வந்தது? இந்த இடம் எப்படி முடிந்தது?'' என்று நான் கேட்டேன்.

கொஞ்சம் கூச்சப்பட்டுக் கொண்டே சொன்னார்.

'' எங்க சமூகத்துத் திருமணச் சங்கம் ஒன்றில் பதிவு செய்து வைத்திருந்தேன் தம்பி. அவர்கள்தான் இந்த இடத்தைச் சொன்னார்கள்'' என்றார்.

என் நண்பர் ஒருவர் தன் வீட்டிற்குக் காம் பவுண்டுச் சுவர் கட்டப் போகிறேன் என்றும் ஒரு நல்ல மேஸ்திரி இருந்தால் சொல்லுங்கள் என்றும் சொன்னார்.

நான் பேச்சைத் திசைதிருப்பினேன்.

"காம்பவுண்டுச் சுவர் என்பது பக்கத்து வீட்டுக் காரருக்கும் உங்களுக்கும் பொது. அவரிடம் போய்ப் பேசிப்பாருங்கள். செலவில் பாதியை அவர் ஏற்றுக்கொள்ளக் கூடும்" என்றேன்.

இந்த யோசனை என் நண்பருக்கு மிகவும் பிடித்துவிட்டது. ஆனாலும் பக்கத்து வீட்டுக் "ரரைக் கேட்கத் தயக்கம். "எப்படிங்க இதைப் .பாய்க் கேக்குறது?" என்றார்.

"அட என்னங்க நீங்க! கடனா கேட்கப் போறீங்க? நாம ரெண்டு பேருமாச் சேர்ந்து காம்பவுண்டுச் சுவர் எழுப்பலாமான்னு சாதா ரணமாக் கேளுங்க" என்றேன்.

"அவர் மறுத்துவிட்டா அசிங்கமாப் போயிடும்" என்றார் மறுபடியும் தயக்கமாய்.

"என் செயலை நினைக்கையில் எனக்கே வியப்பாக இருக்கிறது. என் செயலை நினைத்துப் பார்க்கையில் என்னாலேயே நம்பமுடியவில்லை."

"இப்போது அந்தக் காரைத் தூக்கச் சொன்னீர்கள் என்றால், நிச்சயம் என்னால் முடியாது.

"ஆனால் என் மகன் உயிருக்குப் போராடியதைப் பார்த்ததும் எனக்கு எங்கிருந்துதான் பலம் வந்ததோ தெரியாது. அவனை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்ததுமே என்னுள் பெரிய பலம் வந்து புகுந்துகொண்டது போல் இருந்தது.

"என்னால் காரை உயர்த்த முடியாது என்று எனக்கே தெரியும். ஆனாலும் முயன்றேன். வண்டியை இலேசாக அசைக்க முயன்றதுமே என் நம்பிக்கை வலுப்பெற்றது. "இன்னும் கொஞ்சம் தான்" "கொஞ்சம் முயன்று பார்" "இன்னும் கொஞ்சம் முயற்சி செய்" என்றது உள்மனம்.

"என் முயற்சியையும் என் சாதனையையும் நினைத்தால் இந்த நிமிஷம்கூட எனக்கு வியப்பாக இருக்கிறது" என்றாள் அந்த வீரத்தாய்.

ஜாக்கி எனப்படும் கருவி உடைந்துவிட்டது. கார் நழுவி அந்த இளைஞன் மீது உட்கார்ந்துவிட்டது.

இளைஞன் பயங்கரமாகக் கத்தினான். அடுக்களையில் இருந்த அவன் தாய் பதறிப் போய் ஓடி வந்தாள். காரின் அடியில் சிக்கிக்கொண்ட மகனைப் பார்த்தாள். பெற்ற மனம் என்ன பாடுபட்டிருக்கும்!

உதவிக்குக் குரல் எழுப்பினாள். எவரும் வரவில்லை. அது ஒரு தன்னந்தனியான வீடு.

அந்தத் தாயே அந்தக் காரைத் தூக்க முயன்றாள். குட்டிக் கார் என்றாலும் நடக்கிற காரியமா அது?

ஆனாலும், அந்த அதிசயம் நிகழ்ந்தது.

சிறு உயரத்திற்கு அவளால் அந்தக் காரை உயர்த்த முடிந்தது. அந்த இளைஞன் தப்பித்தான்.

வீரதீரச் செயலுக்காக அந்தத் தாய்க்கு விருது ஒன்று தரப்பட்டது. விருது பெற்ற விழாவில் அந்தத் தாயைப் பேசச் சொன்னார்கள்.

அவள் பேசினாள்.

விட்டு விட்டோமே ! என்று, பின்னால் தங்களைத் தாங்களே நொந்து கொள்வார்கள். ஆனால், இந்த நினைப்பும் அதில் உள்ள அழுத்தமும் அந்தச் செயலைத் தொடங்குவதற்கு முன்பாக இருந்தி ருந்தால் கொஞ்சமாவது பலன் இருக்கும்.

**மே**லை நாட்டில் 666 என்கிற பெயரில் ஒரு மருந்து உள்ளது. இதற்கு ஏன் இப்படிப் பெயர் வந்தது என்று தெரிந்தால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள்.

665 முறை சோதனை செய்தும் அந்த மருந்து உரிய பலனை அளிக்கவில்லை. 666 ஆவது முறை முயன்றபோது அதற்குப் பலன் கிடைத்தது. எனவே, அதையே பெயராக வைத்துவிட்டார்கள்.

புகழ்பெற்ற விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிஸன் மனித குலத்திற்காகக் கணக்கற்ற புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியவர். இவரது எந்தக் கண்டுபிடிப்பும் முதல் முயற்சியில் வென்றதாக வரலாறு இல்லை.

திரும்பத்திரும்ப முயன்று ஒவ்வொரு நிலையாக உயர்ந்து, தவறுகளையும், குறைகளையும் களைந்து

அப்படியே பர்த் கிடைக்காமல் போனாலும் தவறில்லை.

ஏதோ நம்மாலான முயற்சியைச் செய்தோம். நமக்குக் கொடுப்பினை இல்லை என்று மனதைச் சமாதானம் செய்துகொள்ளலாம்.

குறைந்தபட்சம், கேட்டுப் பார்த்துவிட்டோம் என்ற மனநிறைவாவது நமக்குக் கிடைக்கும்.

இல்லாவிட்டால் 'ஒருவேளை நாம் கேட்டிருந்தால் கிடைத்திருக்குமா? ஒருவேளை அவர் கொடுத்திருப்பாரோ ; இப்படிக் கேட்காமல் விட்டு விட்டு, இப்படிப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர் மீது 'பொத் பொத்' தென்று தூங்கி விழுகிறோமே. காலைக் கூட நீட்ட முடியவில்லையே !' என்று நம் மனம் போராட்டம் நடத்தி அந்தப் பயணத்தையே இனிமையற்ற பயணமாக மாற்றிவிடும்.

இரயிலில் இடம் கேட்பது என்பது மட்டுமில்லை பல விஷயங்களிலும் மனிதர்கள் இப்படித்தான். அதை நாம் கேட்டிருக்கலாம். அதற்கு நாம் முயற்சி செய்திருக்கலாம்; கோட்டை

"இதிலே ஒரு அசிங்கமும் இல்லை. இதிலே அவருக்கும் நன்மை இருக்கு. முயற்சிதானே! கேட்டுப் பாருங்க" என்றேன்.

என்ன ஆச்சரியம்!

பக்கத்து வீட்டுக்காரர் "நானும் இந்த யோசனை யில் இருந்தேன்" என்றாராம். என் நண்பருக்கு அப்படி ஒரு சந்தோஷம். காம்பவுண்டுச் சுவர் எடுக்க மொத்தம் 30,000 ரூபாய் ஆனது. 15,000 ரூபாய் மிச்சம். ஒரு சிறு முயற்சி. அது பலன் தந்து விட்டது!

சிலருக்கு இரயிலில் படுக்கும் வசதியான பர்த் இருக்கிறதா என்று டிக்கட் பரிசோதகரிடம் கேட்கத் தயக்கம். அல்லது நிச்சயம் பர்த் இருக்காது என்று இவர்களாகவே ஒரு முன்கூட்டிய முடிவைச் செய்து கொண்டு, முயற்சியைக் கைவிட்டு விடுவார்கள். தயக்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, டிக்கட் பரிசோதகரிடம் கேட்டால் ரொம்ப ஆச்சரியமாக "செங்கல்பட்டு வந்ததும் என்னைப் பாருங்க சொல்றேன்" என்பார். செங்கல்பட்டில் அவரே கூப்பிட்டு பர்த் கொடுத்தாலும் கொடுப்பார்.

இந்தத் தெருவைப் போன்ற மக்கள் நடமாட்டம் உள்ள தெருவை நான் டோக்கியோ நகரிலோ, ஹாங்காங் நகரிலோகூடப் பார்த்தது இல்லை.

மாம்பலம் ரயில் நிலையத்திலிருந்து நின்று பார்த்தால் வெறும் மனிதத் தலைகள். மனிதத் தலைகளைத் தவிர வேறு எதுவும் தென்படாது.

இந்தத் தெருவைப் பார்ப்பவர்களுக்கு இந்தத் தெருவில் நம்மால் நடக்க முடியுமா என்ற மலைப்பே முதலில் ஏற்படும்.

ஆனால், அந்தத் தெருவில் ஓர் அடி எடுத்து வைத்து விட்டீர்களென்றால் அப்புறம் நீங்கள் நடப்பதாகவே உங்களுக்குத் தோன்றாது. உங்களைப் பின்னாலிருந்து தள்ளிவிட ஆட்கள் இருக்கிறார்கள். நடக்க நடக்க உங்களுக்கென்று ஒரு பாதை உருவாக்கப்படுவதையும் உணர்வீர்கள்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. A Thousand miles Journey starts with a small foot step என்கிறது அந்தப் பழமொழி.

ஒரு செயலைச் செய்வதற்கான முயற்சி எனும் முதற்காரியத்திற்குக் குறுக்கே நிற்பவை எவை என்று நாம் சிந்தித்துப் பார்த்தால் சில வியப்பான உண்மைகள் தெரிய வரும்.

முதலில் அந்தச் செயலை நினைத்ததுமே நமக்கு ஏற்படக்கூடிய மலைப்பு. தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்கிற பயம். இதைச் செய்தால் மற்றவர்கள் விமர்சிப்பார்களோ என்ற அச்சம். அதை நன்றாகச் செய்ய வேண்டுமே! இல்லாவிட்டால் செய்யாமல் இருப்பதே சிறந்தது என்கிற பர்பெக்ஷனிசம். நமக்கெல்லாம் இது சரிப்பட்டு வராது என்கிற தாழ்வு மனப்பான்மை; இவைதாம் முயற்சிக்குத் தடையாக இருக்கும் விஷயங்கள்.

ஒரு செயலை நினைத்ததுமே அதைப்பற்றி வரும் மலைப்பு மிகத் தவறானது என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் தர விரும்புகிறேன்.

சென்னை தியாகராய நகரில் உள்ள ரங்கநாதன் தெருவை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அல்லது இப்போது சொல்லப்போவது புதிய தகவலாக அமையலாம்.

பிறகே புதிய கண்டுபிடிப்பை உருவாக்கி யிருக்கிறார்.

அவர் விடாமுயற்சி மேற்கொள்ளாதிருந்தால் மனித குலம் இவ்வளவு நன்மைகளை அடைந்திருக் கவே முடியாது.

ரைட் சகோதரர்களுக்கு முன்னால், மனிதன் பறக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீண்.

இதற்காக ரைட் சகோதரர்கள் முயற்சி மேற் கொள்ளாமல் இருந்தார்களா? ரைட் சகோதரர்கள் தயாரித்த விமானம்கூட சில அடிகளே பறந்தன.

அதற்காக ரைட் சகோதரர்களுக்குப் பின்வந்த வர்கள் சும்மாவா விட்டு விட்டார்கள்? இல்லை. முயற்சிகள் தொடர்ந்தன.

அதனால்தான் இன்று விமானங்கள் உலகை வெற்றி உலா வருகின்றன. விமானம் என்பது பயண உலகில் மாபெரும் புரட்சி அல்லவா? அந்தப் புரட்சிக்குப் பின்னால் முயற்சிகள்தாம் காரணங்களாக இருந்திருக்கின்றன.

ஒரு பென்சில் முழுமையாக இருக்கிறது. ஆனால், அதனால் ஒரு பயனும் இல்லை. காரணம் அது சீவப்படவில்லை.

நம்மில் பலர் இப்படித்தான். கிளட்ச் விடுவிக்கப்படாத வாகனமாகவும், சீவப்படாத பென்சிலாகவும் இருக்கிறோம். நிலைமையை உணர்ந்து, நம்மை நாம் முயற்சி உடையவர்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி மாற்றிக் கொண்டால் நம்மால் எதையும் சாதிக்க முடியும்!

## II.

ஒரு கல்லூரிப் பேராசிரியரைக் கேட்டேன். "உங்கள் கல்லூரியில் எத்தனை பேர் படிக்கிறார்கள்,?" என்று. அவர் சொன்னார், "எங்கள் கல்லூரிக்கு 3000 பேர் வருகிறார்கள் " என்று.

காது அவருக்குச் சரியாக கேட்கவில்லையோ என்று திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டேன்.

அதற்கு அவர், "நீங்கள் கேட்ட கேள்வி தெளிவாக எனக்குக் கேட்டது. நானும் உண்மையைத் தான் சொன்னேன்.

நம் வீட்டுக்கதவைத் தட்டிக்கொண்டேதான் இருக்கின்றன. எப்போதும் விழிப்பாக இருக்கிற வர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள் கிறார்கள். குறட்டை விட்டுக் கொண்டிருப்பவர்கள் கோட்டை விடுகிறார்கள்..

பலருக்குக் கண்முன்னே தெரியும் பாதை கடைசி வரை தெரியவில்லையே என்கிற யோசனை. மேலும் மேலும் அடி எடுத்து வைத்தால், பாதை தெரியும், வழி புரியும். இலக்கும் நம் வசப்படும்.

ஒரு வாகனத்தின் இன்ஜின் உயிர்ப்பிக்கப்பட்டு விட்டது. கியரும் போடப்பட்டு விட்டது. ஆனா லும், வாகனம் புறப்படவில்லை ஏன்?

வண்டு ஓட்டுபவர்களுக்குத் தெரியும்.

கிளட்ச் விடுவிக்கப்படவில்லை. எனவேதான், வண்டி புறப்படவில்லை.

நம்மைப் புறப்படவிடாமல் செய்து கொண்டி ருப்பது நம்முடைய முயற்சியின்மையே தவிர, வேறு அல்ல!

ஒரு பெரிய பயணம் கூடச் சாதாரணமாக ஒரு காலடி எடுத்து வைப்பதிலேயே ஆரம்பமாகிறது என்பது அதன் உட்பொருள்.

எனவே, ஒரு முயற்சிக்குத் தடையென்று தோன்றும் விஷயங்களைத் தடை என்று எண்ணாமல், துணிந்து முயற்சியில் இறங்க வேண்டியது தான்.

பலருக்கு ஓர் உண்மை தெரிவதில்லை.

நமக்கும் வெற்றிக்கும் இடையே இரண்டே இரண்டு உறுதி மொழிகள்தாம் இருக்கின்றன.

ஒன்று,

"உடனே செயல்படத் தொடங்குவேன்" என்பது. இரண்டாவது "அந்த முயற்சியிலிருந்து ஒரு நாளும் பின்வாங்க மாட்டேன்" என்பது.

இப்படிச் சொன்னவர் பிரபல வாழ்வு முன்னேற்றச் சிந்தனையாளர் காப்மேயர்.

நாம் நம்முடைய மனத்தை எப்போதும், தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். வாய்ப்புகள்

"எங்கள் கல்லூரிக்கு 3000 பேர் வருகிறார்கள். ஆனால் எத்தனை பேர் படிக்கிறார்கள் என்று அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்"என்றார்.

நாம் எந்த முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் சரி, அதில் முழுமையாகச் செயல்படாவிட்டால் வளர் வதோ, வெற்றியடைவதோ கடினம். பலரது வாழ்க்கை இப்படித்தான். திக்குத்திசை தெரியாத வாழ்க்கை வாழ்கிறார்கள்.

"நல்லதையே நம்புங்கள் - நடக்கும்" என்று நம் முன்னோர் சொன்னதையே வேதவாக்காகக் கொண்டு நடந்தால் தோல்வியின் சதவிகிதம் நிச்சயமாகக் குறைக்கப்படும்.

அடுத்து, நம் செயலை மற்றவர்கள் எப்படி விமர்சிப்பார்கள் என்கிற பயம்.

ஒன்றை நம்புங்கள். இந்த உலகில் சாதிக்கப் பிறந்தவர்கள், விமர்சிக்கப் பிறந்தவர்கள் என்று இரு பிரிவினர் இருக்கிறார்கள். நாம் வெற்றி பெற் றால் கூட 'எல்லாம் அவன் நேரம்' என்றோ, 'இதெல்லாம் ஒரு வெற்றியா?' என்றோ விமர்சிக் கிறவர்கள் அதிகம்.